**<u>சுருக்கம்</u>**

பெயரிடல் – திருவாரூர் நகராட்சி திருவள்ளுவர் நகரில் அமைக்கப்பட்ட பூங்காவிற்கு, “பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா பூங்கா’’ என பெயர்சூட்டவும், நகர்மன்ற கட்டிடத்திற்கு கலைஞர் மு. கருணாநிதி அலுவலக கட்டிடம்” என பெயர் சூட்டவும் – அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(நநி5) துறை

அரசாணை (நிலை) எண். 39 நாள்: 23.02.2010.

படிக்க:

1 அரசாணை (நிலை) எண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை, நாள் 30.6.1998.

2 அரசாணை (ப) எண்.573, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை, நாள் 14.2.2001.

3 அரசாணை(ப) எண்.395, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை, நாள் 16.9.2008.

மேலும் படிக்க:

4 நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் கடிதம் ந.க. எண்.6602/ 2009/ இ1, நாள் 15.10.2009.

5 நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண். 50384/ 07/எம்.1, நாள் 25.1.2010.

-----

**<u>ஆணை:</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர் ஐந்தாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில், திருவாரூர் நகராட்சி, திருவள்ளுவர் நகரில் பொது நிதியிலிருந்து ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நகராட்சி பூங்காவிற்கு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா பூங்கா என பெயர் சூட்டவும், நகராட்சி வளாகத்தில் பொது நிதியிலிருந்து ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள நகர்மன்ற அலுவலக கட்டிடத்திற்கு ‘தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அலுவலக கட்டிடம்’ என பெயர் சூட்டவும் நகர்மன்ற தலைவரால் பொருள் கொண்டுவரப்பட்டு, மன்றம் முறையே தனது தீர்மான எண்.1121 மற்றும் 1122, நாள் 23.9.2009–ல் ஒப்புதல் வழங்கியுள்ளது என்று திருவாரூர் நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், மேலும் மேற்படி திருவள்ளுவர் நகரில் அமைக்கப்பட்டுள்ள நகராட்சி பூங்காவிற்கு “பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா பூங்கா’’ என பெயர் சூட்டவும், நகராட்சி வளாகத்தில் கட்டப்பட்டுள்ள அலுவலக கட்டிடத்திற்கு “தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அலுவலக கட்டிடம்’’ என பெயர் சூட்டவும் உரிய அனுமதி அளிக்கும்படி நகராட்சி ஆணையர் கேட்டுக்கொண்டுள்ள இக்கோரிக்கையை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளதாக நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்கள் பரிந்துரையினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, திருவாரூர் நகர்மன்ற தீர்மான எண்கள் 1121 மற்றும் 1122, நாள் 23.9.2009–ல் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளதன் அடிப்படையில், அரசாணை எண்.(டி) 395, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 16.09.2008 மற்றும் அரசாணை (ப) எண்.573, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 14.12.2001 ஆகியவற்றை தளர்வு செய்து, திருவாரூர் நகராட்சி திருவள்ளுவர் நகரில் அமைக்கப்பட்ட நகராட்சி பூங்காவிற்கு, "பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா பூங்கா'' என பெயர் சூட்டவும், அந்நகராட்சி வளாகத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள நகர்மன்ற அலுவலக கட்டிடத்திற்கு, ''கலைஞர் மு.கருணாநிதி அலுவலக கட்டிடம்'' என பெயர் சூட்டவும், திருவாரூர் நகராட்சிக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி //

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–600 005.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் மாவட்டம்.
நகராட்சி ஆணையர், திருவாரூர் நகராட்சி, திருவாரூர் மாவட்டம்.

நகல்:

மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
அரசுச் செயலாளரின் தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை, சென்னை–600 009.
இ.கோ/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.